சார்பு நீதிமன்றம், தேவகோட்டை

முன்னிலை: **திரு. எம்.பி.முருகன், எம்.ஏ. எல்எல்.பி.,**

சார்பு நீதிபதி, தேவகோட்டை.

2021-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08ஆம் நாள் புதன்கிழமை

**முதலேற்பு வழக்கு எண்.47/2018** இல் உள்ள

**இடைமனு எண். 1/2021**

* * * * * *

1) **K.R.**கோவிந்தன்
2) **K.R..**சிதம்பரம்
3) **R.**சிதம்பரம்
4) **CT.**சீனிவாசன்
5) **CT.**அழகப்பன் ...உத்தேசிக்கப்பட்ட 3 முதல் 7 மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1) சீதா சிதம்பரம்
2) **C.**வெங்கடாசலம் ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1) சீதை ஆச்சி என்ற நூர்ஜஹான் பீவி,
2) செந்தில்குமார்
3) சார்பதிவாளர் எண் 2
சார்பதிவாளர் அலுவலகம், காரைக்குடி .....எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 22.11.2021 அன்று என் முன்னிலையில் விசாரணைக்காக வந்த போது உத்தேசிக்கப்பட்ட 3 முதல் 7 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.எஸ்.ஜான்சிராணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.சித்தீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அரு.பழனியப்பன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/3 பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக்கேட்டு, இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கலாகும்.............

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் கண்டுள்ள நபர்களான 3 முதல் 7 வாதிகளாக கட்சி சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

இந்த மனுவில் 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி ஓ.எஸ். நம்பரில் கண்டுள்ள சொத்துக்கள் **CV.CT. Family** என்ற அடையாளம் உடைய குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ஆனால் இந்த வழக்கில் உள்ள 1, 2 வாதிகள் தங்களை மட்டும் **CV.CT.Family**-க்கு உரிமையுள்ள நபர்கள்போல் வழக்கு தாக்கல் செய்த விபரம் ஆகஸ்ட் 2020 மாதம் தான் தெரியவந்தது. உண்மையில் இந்த வழக்கு சொத்தானது **CV.CT. Family** குடும்பத்திற்கு 12.12.1912-ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் பக்கம் 15, 16-ல் இந்த வழக்கு சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பாகபத்திரமும் மனுதாரர்களின் மூதாதையர்களால் திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண் 4108/1912 என பதிவும் ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் மூலம் இந்த வழக்குரை சொத்து **CV.CT. Family** குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும் இந்த சொத்தினை பொறுத்து இந்த உத்தேசிக்கப்பட்ட மனுதாரர்களுக்கும் ஏற்கனவே இந்த வழக்கில் உள்ள 1, 2 வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும். எனவே இந்த வழக்குரையில் கண்டுள்ள சொத்தும் **CV.CT. Family** -க்கு பாத்தியப்பட்ட நிலையில் இந்த மனுதாரர்களையும் தாவா வழக்கில் உத்தேசிக்கப்பட்ட 3 முதல் 7 மனுதாரர்கள்/வாதிகளாக கட்சி சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. இவர்களை கட்சி சேர்ப்பதால் 1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்கக்கூடியதில்லை. கட்சி சேர்த்துக்கொள்ளாவிட்டால் இந்த மனுதாரர்கள் ஒர் தனியான வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் கண்டுள்ள நபர்களான 3 முதல் 7 வாதிகளாக கட்சி சேர்த்துக்கொள்ள உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் கூறுவதுபோல் வழக்கிடை சொத்து அவர்களுக்கு பாத்தியம் இருப்பதை வழக்கின் வாதிகள் ஏன் கருத்தில் கொள்ளவில்லை என்பதை மனுதாரர்களே சொல்லவேண்டும். உண்மையில் இந்த மனுதாரர்களுக்கு வழக்கிடை சொத்தில் பாத்தியம் இருக்கும் என்றால் வாதிகள் மனுதாரர்களுடன் சேர்ந்து கூட்டாக வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யப்பட வில்லை. உண்மையில் மனுதாரர்களுக்கு வழக்கிடை சொத்தில் பாத்தியமும், உரிமையும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் தனி வழக்கு தொடர அவர்களுக்கு பூரண உரிமை இருக்கிறது. ஒத்த கருத்தே இல்லாத வாதிகளோடு தங்களையும் வாதிகளாக சேர்க்க பரிகாரம் கோருவது வேடிக்கையாகவும், வினோதமாகவும் உள்ளது. மனுதாரர்கள் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. மனுவுடன் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையாக இருக்கும்பட்சத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் குடும்ப சொத்து தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் சுமார் 2 ஆண்டுகள் கழித்து மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எந்த வகையிலும் மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**<u>5. பிரச்சனை:</u>**

இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுதாரர்கள் உத்தேசிக்கப்பட்ட 3 முதல் 7 வாதிகள் ஆவார்கள். தற்போதைய அசல் வழக்கில் இம்மனுதாரர் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அசல் வழக்கில் தங்களை வாதிகளாக சேர்த்துக்கொள்ளவேண்டும் எனக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து ஆதியில் **CV.CT.** குடும்பத்தாருக்கு 12.12.1912-ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை

ஆவணத்தின் படி பாத்தியப்பட்ட சொத்து எனவும், இந்த சொத்தில் மனுதாரர்களுக்கும் உரிமை இருந்து வருவதாகவும் அவர்களை தரப்பினர்களாக கட்சி சேர்க்கவேண்டும் எனவும் இம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இந்நிலையில் அசல் வழக்கின் 2ம் பிரதிவாதி மட்டுமே இதனை ஆட்சேபணை செய்து எதிர்உரை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுதாரர்களுக்கு இருந்து வருவதாக சொல்லப்படும் உரிமையை வாதிகள் ஏன் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்பதை இம்மனுதாரர்கள் மெய்பிக்க கடமைப்பட்டுள்ளனர். எனவே அசல் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் கூட்டாக சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை எனவும் உரிமை இருக்கும் பட்சத்தில் தனியாக வழக்கு தாக்கல் செய்ய இயலும் எனவும் ஒத்த கருத்து இல்லாத வாதிகளோடு தங்களையும் சேர்த்துக்கொள்ளக் கோருவது வேடிக்கையாக உள்ளது. எனவே காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் எனவும் எதிர்உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய எதிர்மனுதாரர்கள் எந்த ஒரு ஆட்சேபணையையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

7. தாவா அசல் வழக்கு தாவா சொத்தைப்பொறுத்து 02.06.2011 அன்று ஏற்பட்டுள்ள ஆவணத்தை சட்டப்படி செல்லாது எனவும், இல்லாத நிலையை உடையது எனவும் விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கை இம்மனுவின் 1 மற்றும் 2வது எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த 1, 2 எதிர்மனுதாரர்கள் வாதிகளாக இருந்து பிராதை தாக்கல் செய்யும்போது இந்த மனுதாரர்களையும் ஒரு தரப்பினர்களாக கட்சி சேர்க்க விரும்பியிருக்கவில்லை. இது பாகப் பிரிவினை வழக்காக அமையாத சூழ்நிலையில் அனைத்து உரிமையாளர்களையும், பாத்தியஸ்தர்களையும் கட்சி சேர்க்கவேண்டியது அவசியம் இல்லை என வாதிகள் கருதியதால் இம்மனுதாரர்களை கட்சி சேர்க்கவில்லை. இந்நிலையில் இந்த மனுதாரர்கள் தற்போதைய அசல் வழக்கில் வாதிகளாக இணைத்துக்கொள்வதற்கு போதிய முகாந்திரம் இருந்து வருகிறதா என்பதை பார்க்கவேண்டும்.

8. ஒரு ஆவணம் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யக்கோரும் வழக்கில் யார் யாரை தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பது வாதிகளின் முடிவு ஆகும். பிராதில் கோரியுள்ள பரிகாரத்தை பெறுவதற்கு அவசியமான முகாந்திரங்களை எடுத்துரைத்து மெய்பிக்க வேண்டியது வாதிகளின் கடமையாகும். அப்படி இருக்கும்போது இவ்வழக்கில் வாதிகள் இம் மனுதாரர்களை கட்சி சேர்க்காமல் அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்கள் தங்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை. தாவா சொத்தினை பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியதாக அமைந்திருக்கிறதா இல்லையா என்பதே தீர்வு காணவேண்டிய பிரச்சனையாக அமைந்துள்ளது. அவ்வாறு காணப்படும் தீர்வு இந்த மனுதாரர்களின் உரிமையை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடியதாக அமையாது. எதிர்உரையில் சொல்லியிருப்பதுபோல தாவா சொத்துக்களில் மனுதாரர்களுக்கு ஏதேனும் உரிமை இருந்து வருமானால் அதனைப் பொறுத்து தனியாக அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமை உள்ளது. இம்மனுதாரர்களின் உரிமையை தீர்மானிப்பதற்காக எந்த ஒரு பிரச்சனையும் அசல் வழக்கில் இருந்து வரவில்லை. எனவே இந்த மனுதாரர்களை அவசிய தரப்பினர்களாக கருத இயலாது எனவும், வாதிகள் விரும்பாத நிலையில் அவர்களுடன் இம்மனுதாரர்கள் சேர்ந்துக்கொள்வதற்கு உத்தரவிடுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையாது எனவும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. அந்த வகையில் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக**, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2021ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08ம் நாள் பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,<br>
தேவகோட்டை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>**

--இல்லை--

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>**

--இல்லை--

சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

சார்பு நீதிமன்றம்,
தேவகோட்டை
**மு.வ.எண்.47/2018 இன்**
**இ.ம.எண்.**1/2021
சீரான/வரைவு உத்தரவு
**08.12.2021.**